ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**2414/07 - 2024 දෙසැම්බර් මස 10 වැනි අඟහරුවාදා - 2024.12.10**

*2414/07 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 104/ 44* (VI)*அ*

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

பின்வரும் பெயர்களைக் கொண்ட "ஜவன் திசாநாயக்க நம்பிக்கைப் பொறுப்பு" இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்களான-

1. திரு. லலித் ஜவன் திசாநாயக்க ;
2. திருமதி சிறிவந்தி அரோஷா பெரேரா ;
3. திருமதி மெயசி பிரதிபா திசாநாயக்க ; அத்துடன்
4. திருமதி நிபுனி பாக்யா திசாநாயக்க

ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் தமது கூட்டிணைப்புக்கென நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளார்களாதலால்,

ஆகவே, இப்போது, மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஆகிய நான், இக்கட்டளை மூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன் பின்வருவனவற்றைச் செய்யுமாறும் பணித்து வெளிப்படுத்துகிறேன்-

(அ) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மடவல லியனகே திஸ்ஸ லியனகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிடப்பட்ட 1365 ஆம் இலக்கத்தைக்

1A – G 43214 – 05 (2024/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கொண்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டவர்களான அவர்களது பின்னுறுவோரும் "ஜவன் திசாநாயக்க நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெற்றுக்கொள்ளலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடமானம் வைக்கலாம், குத்தகைக்குக் விடலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும் ; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பில் எழும் எல்லா வழக்குகளிலும் வழக்கெழு காரணங்களிலும் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தைக் கொண்டு இலங்கையில் அல்லது வேறெங்காயினுமுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடை பகர்வதற்கும், விடை பகரப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் சட்டப்படி இயலுமானவர்களும் தகுதியானவர்களுமாதலும் வேண்டும்.

இக்கட்டளை எனக்கு அவசியமானதெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

**ஹர்ஷண நாணயக்கார,**
நீதி மற்றும் தேசிய ஒருமைபபாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2024*, திசெம்பர் *02*.

EOG *12-0083*